<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்</u>

<u>நாள். 07.06.2023</u>
<u>O.S. 191/2021</u>
<u>வா.சா.1 ஸ்பர்ஜன் சாமுவேல்</u>
<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இந்த வழக்கை என்னை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்ற கூடாது என தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி தான். மூல காரணமாக குறிப்பிடும் 26.08.2021 ம் தேதி உத்தரவு ஒட்டப்பட்ட நாளும் அதன் பிறகு 01.09.2021 ம் பிரதிவாதிகள் பார்வையிட்டு முயற்சி மேற்கொண்ட நாளுமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான். எனக்கு எதிராக 3ம் பிரதிவாதி உடன்மூட்டு தர்மத்திற்கு சொந்தமான சொத்து அதில் இருந்து என்னை வெளியேற்ற வேண்டும் என்று ஒரு மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி தான்.

வா.சா.ஆ.4 அந்த மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வழக்கில் எனக்கு முறையாக அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் இல்லை. எனக்கு போதிய வாய்புகள் கொடுக்கப்பட்ட பின்பு தான் வா.சா.ஆ.4 உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 உத்தரவு எனக்கு 26.08.2021 அன்று ஒட்டப்பட்டவுடன் தெரிய வந்தது. வா.சா.ஆ.4 உத்தரவிற்கு எதிராக எந்த விதமான மேல் முறையீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் திருநெல்வேலி அலுவலகத்தில் மேல் முறையீடு தாக்கல்செய்திருந்தேன். எப்போது தாக்கல் செய்திருந்தேன் என்று எனக்கு நினைவில்லை.

நான் அவ்வாறு மேல் முறையீடு செய்ததாக என் பிராதில் முதல் விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றாலும், எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரிதான். வா.சா.ஆ.4 உத்தரவை

எதிர்த்து நான் வேறு எந்த மேல் முறையீடு, நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் சரி தான். நான் இந்த வழக்கில் அ.வ.எண்.230/2016 முடியும் வரை எந்த வித இடையூறும் என் அனுபவத்திற்கு செய்யக்கூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரி தான். வா.சா.ஆ.4 உத்தரவை நான் இந்த வழக்கில் ஆட்சேபித்தோ எதிர்த்தோ எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரி தான்.

வா.சா.ஆ.3 அ.வ.எண்.230/2016 ல் பிராது என்றால் சரி தான். அந்த வழக்கை நான் தான் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும். அந்த வழக்கில் அந்த வழக்கின் வாதிகளுக்கு எதிராக இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தீர்ப்பு விபரம் தெரியாமல் தான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி தான்.

பெருமாள் யாதவ் என்பவர் வழக்கு சொத்திற்கு அருகே முருகன் கோவில் இருப்பதாக வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரி தான். அந்த முருகன் சிலையை எடுக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கோவில் இருப்பதாகவும் பூஜை நடப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது ஒரு அனுமானத்தின் பேரில் சொல்வது என்றால் எனக்கு நேரடியாக தெரியும். அந்த கோவில் எங்கு உள்ளது என்றால் தனியார் அறக்கட்டளை நிலத்தில் இருந்தது. அறக்கட்டளை நிலம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் என் கைவசம் உள்ள சொத்தோடு சேர்த்து 1 3/4, 2 ஏக்கர் இருக்கும்.

எனக்கு சொத்தை கைவசம் கொடுத்த ஜெயபால் அந்த டிரஸ்டின் அங்கத்தினர் இல்லை. ஜெயபால் பெயரில் உள்ள ஆவணங்களை நான்

பார்த்தேன். ஜெயபால் வாங்கிய 2 பதிவு பெற்ற ஆவணங்களை நான் பார்த்தேன். எனக்கு பதிவு செய்து கொடுத்திருந்தாரா என்றால் பதிவு செய்து தருவதாக கூறினார். அவர் இறந்துவிட்டார். ஜெயபால் பெயரிலான ஆவணத்தை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஜெயபால் பெயரிலான ஆவண தேதி நினைவில்லை. 2015 ம் ஆண்டு ஆவணம் ஆகும்.

ஜெயபாலுக்கு வைரவன் பண்டாரம் மற்றும் லட்சும் ஆவணத்தை எழுதி கொடுத்திருந்தார்கள். அவர்கள் இருவரும் அறக்கட்டளையில் அறங்காவலர்களாக இருந்தார்களா என்றால் இல்லை. அவர்களுக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் அவர்களுடைய பூர்வீக சொத்து. சொத்து அவர்கள் தனிப்பட்ட சொத்தா அல்லது அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் அறக்கட்டளைக்கு சொந்தமானது. வைரவன் பண்டாரம் குடும்பத்திற்கு சொந்தமான சொத்து என சொல்வது தவறு என்றால் சரியல்ல. அவர்கள் குடும்பத்திற்கு சொந்தமான சொத்து என காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான்.

நான் தனியார் குடும்ப அறக்கட்டளை என சொல்வதற்கு எந்த தனியார் குடும்பம் என குறிப்பிடவில்லை என்றாலும், அதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரி தான். எனக்கு எந்த தனியார் குடும்பம் என ஞாபகமில்லை. அ.வ.எண்.230/2016 வழக்கில் அவர்கள் தனியார் அறக்கட்டளை என கேட்டிருந்தார்கள் என்றால் சரி தான். அது தனியார் அறக்கட்டளை அல்ல பொது அறக்கட்டளை என்று சார்பு நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது.

அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போதே அந்த வழக்கின்

வாதியான உதயகுமார் உயர் நீதிமன்றத்தில் இரண்டு நீதிப்பேராணைகள் தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதிகள் தரப்பினர் அல்ல என்றால் சரி தான். நான் குறிப்பிடும் அறக்கட்டளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் அவசிய தரப்பினர் இல்லை என்பதால் நான் கட்சி சேர்க்கவில்லை. வா.சா.ஆ.2 வழக்கில் இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பினர் அல்ல என்பதால் அந்த தீர்ப்பு பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 வழக்கில் எனக்கு அந்த சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரி தான். அது அவசியம் இல்லை.

அறக்கட்டளை நிர்வாகத்தில் இருந்து எனக்கு எவ்வித ஆவணமும் எழுதி தரப்படவில்லை என்றால் சரி தான். என் பெயரில் கதவு இலக்கம் மாற்றப்பட்டதாக தெரிவித்துள்ளதற்கு மாநகராட்சியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். என் பெயரில் எந்த தேதியில் இருந்து கதவு இலக்கம் மாற்றம் செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 உத்தரவுக்கு முன்பா பின்பா என்றால் உயர் நீதிமன்ற உத்தரவுக்கு முன் என் பெயரில் கதவு இலக்கம் மாற்றம் செய்து கொடுத்து விட்டார்கள்.

நான் என் பெயரில் கதவு இலக்கம் மாற்ற வேண்டி விண்ணப்பித்தாக அதன் தேதி விபரம் எனது முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றாலும், அந்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரி தான். அ.வ.எண்.230/2016 நான் தரப்பினர் அல்ல என்றால் சரி தான். அ.வ.எண்.230/2016 நிலுவையில் இருக்கும் போது என்னை ஒழிப்பிக்க வேண்டி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செயல்படுத்தியது தவறு என நான்

குறிப்பிட்டுள்ளது சரியல்ல என்றால் தவறு.

01.09.2021 வருவாய் துறையினர், காவல் துறையினர் மற்றும் இந்து சமய அறநிலைய துறையினர் சொத்தில் இருந்து என்னை ஒழிப்பிக்க வந்தார்கள் என்றால் சரி தான். வருவாய் துறையும் காவல் துறையும் அறநிலைய துறையும் சட்டப்படியான நடவடிக்கைக்கு தான் உடன் பாதுகாப்பு தந்தார்கள் என்றால் சரியல்ல. 10.04.2023 ல் அ.வ.எண்.230/2016 ல் இரண்டாவது சார்பு கூடுதல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண்.230/2016 வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது என்னென்ன நடவடிக்கைகள் நடைபெற்றது என்றோ எனக்கு தெரியாது என்றால் சரி தான். வா.சா.ஆ.3 ஐ பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான்.

வா.சா.ஆ.3 ஆவணத்தை எனக்கு பி.கே கிருஷ்ணன் கொடுத்தாரா உதயகுமார் கொடுத்தாரா என்றால் பி.கே.கிருஷ்ணன் கொடுத்தார். பி.கே. கிருஷ்ணன் சொன்னதின் அடிப்படையில் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உதயகுமார என்பவர் மாநகராட்சி கவுன்சிலர் என்றால் சரி தான். அவர் கடையையும் ஒழிப்பிக்க வந்தார்கள் என்றால் சரியல்ல. என் கடையை ஒழிப்பிக்க வந்த நாளில் மொத்தம் எத்தனை கடைகள் வீடுகள் ஒழிப்பிக்க வந்திருந்தார்கள் என்றால் தெரியாது.

அச்சமயம் எவ்வளவு நேரம் சாலை மறியல் செய்தோம் என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. 01.09.2021 அன்று அவர்கள் வரவேயில்லை. சாட்சி தற்போது அவருக்கு தெரியவில்லை என்று தெரிவித்தார். நான் வழக்கில் என்னை 01.09.2021 அன்று ஒழிப்பிக்க

முயற்சி செய்ததாக குறிப்பிட்டது அனுமானத்தின் பேரில் என்றால் சரியல்ல. நான் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஜெயபாலுக்கு சொந்தமான சொத்து என்று அவரிடம் இருந்து கை மாற்றம் பெற்றதாகவும், எவ்வித ஆவணங்களையும் முன்னிலை படுத்தாமலும், அ.வ.எண்.230/2016 முடிவு எட்டும் வரையிலும், சட்ட பூர்வமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்த கூடாது என்று கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் எந்த வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு நான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.